2026-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

**உங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்குவேன். யாத் 34:24**

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

பிப்ரவரி மாத இதழ்

நீ எகிப்து தேசத்திலிருந்து
புறப்பட்ட நாளில் நடந்ததுபோலவே
உன்னை
**அதிசயங்களைக்**
காணப்பண்ணுவேன்.
மீகா 7 : 15



**AS IN THE DAYS WHEN YOU CAME OUT OF THE LAND OF EGYPT,**
**I WILL SHOW YOU MARVELOUS THINGS.**
**MICAH 7:15**

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்
Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVIII | FEB |

# சபையின் இலக்குகள் - 2026

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 7000
2. மொத்த பராமரிப்புக் குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 60 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- ( 3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 லட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 300 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டை அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறை தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 200 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

## 15 வகை நமது சபையின் ஊழியங்கள்

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. பராமரிப்புக்குழு ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. மீடியா ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. ஹிந்தி மொழி பேசும் மக்கள் மத்தியில் ஊழியம்
15. குளோபல் அவுட்ரீச் ஊழியம்

# இந்த மாத வாக்குத்தத்தம்

## நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.
## மீகா7:15

ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த ஆண்டு இரண்டாவது மாதத்தில் பிரவேசிக்கிற உங்கள் வாழ்வில் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்களைச் செய்வார்.நம் தேவன் அதிசயமானவர். நாம் ஆராதிக்கிற தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

எகிப்து தேசத்தில் இருந்த தமது ஜனங்களை 400 வருட அடிமைத்தனத்தில் இருந்து மீட்ட தேவன் உங்கள் வாழ்வில் இருக்கிற சிறையிருப்பையும் மாற்றுவார். அற்புதங்கள் செய்து உங்களை விடுதலையாக்குவார். பார்வோனின் வல்லமைகள் அழிக்கப்படும்.

இஸ்ரவேல் ஜனங்கள் முறையிட்டது போல நீங்களும் விடுதலை பெறும் வரை அற்புதம் நடக்கும் வரை முறையிட்டு மன்றாடுங்கள். நிச்சயம் உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்.



**தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக...**

**Rev. Dr. J. Samuel Jebaraj**

ஆண்கள் பகுதி

# தடைகளை உடையுங்கள்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் புருஷர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள். வளரவேண்டும் என்கிற எண்ணமுடைய நபருக்கோ,நிறுவனத்திற்கோ, சபைக்கோ தடைகள் வரும் என்பது எல்லாரும் அறிந்ததே. தடைகளை தகர்த்தெறிந்தால்தான் வளர முடியும். பலவானை முந்திக்கட்டினால் தான் சாதிக்க முடியும் (மத் 12:29) என்பதை இயேசு வலியுறுத்துகிறார். இரண்டு விதமான தடைகள் இருக்கின்றன. ஒன்று நமக்குள் இருப்பவைகள், மற்றொன்று நம்மை எதிர் நோக்கி இருக்கும் தடைகள்.

**நமக்குள் இருக்கும் தடைகள்**:

பவுல் அப்போஸ்தலனுடைய கூற்றுப்படி, எப்பொழுதெல்லாம் நமக்குள் சுயம் எழும்புகிறதோ, நமக்குள் புதையுண்டிருக்கிற தேவன் விரும்பாத சுபாவங்கள் வெளிவருகிறதோ அத்தருணங்களில் "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைய வேண்டும்" (கலா 5:24) என்கிற வசனத்தை கடைபிடிக்க வேண்டும். இது நாள்தோறும் நாம் செய்யக்கூடிய ஆவிக்குரிய பயிற்சி.

பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது (மத்13.26) என்ற வசனத்தின்படி நம்மில் தேவன் விரும்பாத களை போன்ற குணலட்சணங்கள் சேர்ந்து வளரும். அதை வளர விடாமல் தடுக்க வேண்டும். அனுதினமும் நாம் நம்மை திருத்திக் கொள்ள, சரிசெய்ய எடுக்கும் முயற்சிகள் நம்மை சரியான வளர்ச்சிக்கு நேராக கொண்டு செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

**நம்மை எதிர்நோக்கி இருக்கும் தடைகள்**:

நம்மை சுற்றியுள்ள ஜனங்கள் மற்றும் சூழ்நிலைகளிலிருந்து ஒருவித புற அழுத்தம் நம்மை நோக்கி வந்து கொண்டே இருக்கும். வளர்ச்சியை தடை செய்யும் உலக கவலை மற்றும் ஐசுவரியத்தின் மயக்கம் இவைகள் இதில் முதலானவைகள். விதைக்கிறவனைப் பற்றிய உவமையில், முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தை கேட்கிறவனாயிருந்தும், உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் அவன் பலனற்றுப் போவான் (மத்13:22) என்று வாசிக்கிறோம். விதையின் வளர்ச்சியை முள் தடுப்பது போல் உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் கிறிஸ்துவில் நாம் இடம் கொடுக்க விடாது.

ஈசாக்கின் வளர்ச்சிக்கு, யோசேப்பின் வளர்ச்சிக்கு, தாவீதின் வளர்ச்சிக்கு மனித எதிரிகள் எழும்பினார்கள். ஆனால் இவர்களெல்லாரும் தேவமனிதர்களாய் இருந்ததால் அந்த சூழ்நிலையிலும் வளர்ந்தார்கள். அவர்கள் வளர்ச்சியை யாரும் தடை செய்ய முடியவில்லை. (ஆதி 26:12-22, ஆதி49:22-24, 1 சாமு29:1-7). நாம் வளரும்போது சக மனிதர்கள் அதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகவே மனித எதிர்ப்புகள் நம் வளர்ச்சியின் பாதையில் தவிர்க்க முடியாதவைகளே. ஆனால், அவற்றின் நடுவில் சோர்ந்து போகாமல் மனித எதிர்ப்புகளை மேற்கொண்டு வளருவது தான் மேன்மையான வாழ்க்கை.

தேவ வார்த்தையினால் அஸ்திபாரமாக்கபட்ட வாழ்க்கை, புயல், வெள்ளம், காற்று போன்ற எந்த இன்னல்களுக்குள் சென்றாலும், நமது வளர்ச்சியை தடை செய்ய முடியாது (மத் 7:24-26). போராட்டங்கள் நடுவே நிலைத்து நிற்கும் வாழ்க்கையை கொண்டிருப்பவர்களே தலை சிறந்த புருஷர்கள்.


**புருஷர் ஐக்கிய கூட்டம்**

திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 -8.45 மணி வரை

இணைந்து ஜெபிக்க யாவரையும்
அன்புடன் அழைக்கிறோம்..

# கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்தீரியே புகழப்படுவாள்

பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா? புகழ்ச்சியை விரும்பாத எந்த பெண்ணும் இருக்கவே மாட்டாள். அவள் ஒரு காரியத்தை செய்தால் பாராட்டை எதிர்பார்ப்பாள். பாராட்டிவிட்டால் அவர்களுக்காக எதையும் செய்யும் திறமை உள்ளவர்கள் தான் பெண்கள். ஆனால் குடும்பத்தில் அப்படி எந்த ஒரு பெண்ணுக்கும் பாராட்டு கிடைப்பதில்லை. செய்ய வேண்டியதை தான் செய்தாய் என்று மட்டம் தட்டப்படுவதினால், சில சமயம் சோர்ந்து போவதும் உண்டு. வேதம் சொல்கிறது, கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்தீரியே புகழப்படுவாள். காரணம் என்ன எனப் பார்ப்போம்.

**1. ஆசீர்வதிக்கப்படுகிறாள்:**

கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். கர்த்தருக்குப் பயப்படுகிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். காரணம் அவர்கள் மேல் கர்த்தரின் ஆசீர்வாதம் காணப்படும். கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கும் போது ஆசீர்வதிக்கப்படுகிறோம். பெண்களே, புகழப்பட வேண்டுமா? கர்த்தருக்குப் பயந்து வாழுங்கள். தீமையை, தீமையான காரியங்களை வெறுத்து விடுங்கள். ரோமரில் பவுல் எழுதும் போது, நீ தீமையை தீமையினால் வெல்லாமல், தீமையை நன்மையினாலே வெல்லு என்று கூறுகிறார். பெண்களே! தீமை செய்வதை விட்டுவிடுங்கள். கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்கள் மேல் பனிபோல இறங்கி வரும். நீங்கள் மற்றவர்களால் புகழப்படுவீர்கள்.

**2. நிதானமாய் நடப்பாள்:**

நிதானமாய் நடக்கிறவர்கள் கர்த்தருக்குப் பயப்படுவார்கள். பெண்களுக்கு மிக முக்கியமான ஒரு பழக்கம் நிதானம். கர்த்தருக்குப் பயப்படும் பயம் யாருக்குள் காணப்படுகிறதோ, அவர்கள் நிதானமாய் செய்வார்கள், பேசுவார்கள். நீங்கள் ஞானமாய் நடந்து கொள்வீர்கள் என்றால் நிச்சயம் நீங்கள், மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். ஞானமே முக்கியம், அதை கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். குணசாலியான ஸ்தீரி தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். அவள் புருஷனால், பிள்ளைகளால் புகழப்படுகிறாள்.

**3. கீழ்படிவாள்:**

கர்த்தருக்குப் பயந்து, அவர் கட்டளைகளின்படி நடக்கிற பெண்களுக்குள் இயல்பாகவே தாழ்மை, கீழ்படிதல் காணப்படும். வேத வசனங்களை வாசித்து, அதன்படி நடக்கும்போது, மிகுந்த சமாதானம் உண்டு. வேத வசனத்தின்படியே குடும்பத்தை, பிள்ளைகளை நடத்தும் போது, நாம் நடக்க வேண்டிய வழிகளை கர்த்தரே கற்றுத் தருவார். குடும்பம் தேவ சமாதானத்தினால் நிரப்பப்படும். எல்லாராலும் புகழப்படுவாள்.

பெண்களே! புகழப்படுவதற்கு இதுவே வழி.



பெண்கள் ஆராதனை
செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.
LIVE STREAMING

# நெகிழ்ந்த கைகளை திடப்படுத்தி

வாலிபர் பகுதி

**பொறுப்பு**: Pr. **காலேப் ராபர்ட்**
**உதவி**: Bro. **பிலிப்**

**தேவனால் உலக தோற்றத்திற்கு முன்னே தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.**

கடந்த வாரம் நான் சபைக்கு சென்றிருந்த போது வாழ்வின் சூழ்நிலைகளை குறித்து ஒரு சகோதரரோடு உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர், தன் வாழ்வில் நிகழ்ந்த காரியங்கள் குறித்து பேசினார். அவரின் தந்தை தேவனுக்காக வைராக்கியமாக ஊழியம் செய்தவராக இருந்தும் வியாதியினால் வேதனைப்பட்டுள்ளார், அதினால் இவருக்கு தேவன் மீது கோபம் வந்துள்ளது.

பின்னர் தேவன் அவரின் தந்தையை சுகமாக்கியுள்ளார்,அதன்பின் " தேவன் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்தோடு தான் செய்துள்ளார்" என்று புரிந்து கொண்டார். இச்சம்பவத்தை சொல்லிவிட்டு, அவர் –"அன்றைக்கு எனக்கு தெரியாது, என் வாழ்வில் நான் போன பாதை, இன்று உன்னை விசுவாசத்தில் உற்சாகப்படுத்தும் என்று. தேவன் எவ்வளவு நல்லவர்! எவ்வளவு நுட்பமாக காரியங்களை திட்டம் செய்கிறார்" என்று.

மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துக்கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி– எபிரெயர் 12:1

நாம் வாழும் உலகம் ஒவ்வொரு நாளும் மோசம் அடந்துக்கொண்டே போகிறது. வேலை இடத்தில், தொழிலில் நமக்கு பிரச்சனை பண்ணுகிற நபர்கள்; உறவுகள், நண்பர்களில் நமக்கு வேதனை உண்டாக்குபவர்கள்; பொருளாதார சூழல், தேவைகள்; நம்முடைய ஆவிக்குரிய போராட்டம் – எல்லாம் அதிகரிக்கவே செய்கின்றன.

நான் பல நாட்கள் நினைத்தது உண்டு, எனக்கு இன்னும் கொஞ்சம் கூட சம்பளம் இருந்தால் நான் சிறிது நிம்மதியாக இருப்பேனே, தேவன் அதை கூட வா எனக்கு மறுக்கிறார் என்று. பின்னரே புரிந்துக்கொண்டேன்– ' என் நம்பிக்கையும் மனமும் பணத்தின் மீது போகிறதே. அண்டை சராசரங்களையும் படைத்த தெய்வம், என் பாவங்களுக்காக காயங்கள், வேதனைகள், அவமானங்கள் பட்டு என் ஜீவனை மீட்டுக் கொண்டவர், எத்தனையோ விபத்துகள், வியாதிகள் மத்தியிலும் என்னை நடத்தி வருகிறாரே – நான் அவரை அல்லவா பற்றிக்கொள்ள வேண்டும்?'

எனக்கு அவர் போதும், அவர் சொன்னதை செய்வார். பொய் சொல்ல அவர் மனிதன் அல்ல. ஏற்ற நேரத்தில் அற்பமான உலகத் தேவைகளை அவர் நேர்த்தியாய் சந்திப்பார். இந்த உலகத்தின் பாடுகள் என்னை நெருக்கும் போது, பிசாசு என் விசுவாசத்தை குறைந்து போகப்பண்ணும் போது, சுற்றியிருக்கும் சாட்சிகளை கேட்டு, இயேசுவையே நோக்கி, இந்த ஓட்டத்தை தொடருவேன். படிப்போ, பணமோ, வேலையோ, தொழிலோ, உலக பொருட்களோ இம்மைக்காக மட்டும்தான். அவரே நம் பிராதன பரிசு, அவரே நம் பொக்கிஷம். அவரை அண்டிக்கொள்வதே வாழ்வின் வெற்றி.

# வாழ்வின் நோக்கம்

பொறுப்பு: Mrs. லீலிதனராஜ்

**அன்பான சிறுபிள்ளைகளே இந்த 2026 ஆம் ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கிற உங்கள் அனைவரையும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.**



பென்னி என்பவர் இளம்வயதில் நேர்மையானவராகவும் நல்லவராகவும் நடந்து கொண்டார். அவர் வாழ்வின் இலட்சியமே பணம் சம்பாதிப்பதில் வெற்றி பெறுவதே. அவர் டென்வார் என்ற இடத்தில் உள்ள ஒரு கடையில் வாரத்திற்கு ஆறு டாலர்கள் சம்பளத்தில் வேலை பார்த்தார். அவருடைய எண்ணமெல்லாம் ஒரு நாள் இலட்சாதிபதியாக வேண்டும் என்பதுதான். பல கஷ்டங்களைப்பட்டு இலட்சாதிபதியாகி விட்டார். அது தற்காலிக திருப்தியை தந்தது. நான் கோடீஸ்வரன் ஆக வேண்டும் என எண்ணினார்.



பென்னியும் அவரது மனைவியும் தங்களது வியாபரத்தைப் பெருக்க கடினமாக உழைத்தார்கள். ஆனால் ஒரு நாள் அவருடைய மனைவி நிமோனியா காய்ச்சலால் தாக்கப்பட்டு மிக மோசமான நிலையில் இருந்தார்கள். அந்நேரத்தில் பென்னிக்கு இந்த உலகமே இருண்டு விட்டது போன்று இருந்தது. என்னுடைய வியாபாரத்தை விருத்தி செய்து பணத்தை ஏராளமாக சம்பாதித்து என்ன பயன்? என்று வேதனை அடைந்தார் பென்னி. சீக்கிரத்தில் அவருடைய வியாபாரம் வீழ்ச்சியடைந்தது. பணவிஷயத்தில் பயங்கர நஷ்டம் வந்தது.இந்த சூழ்நிலையில்தான் இயேசுவிடம் திரும்பினார். மனைவியும் தெய்வீக சுகம் பெற்றார்.

பென்னி, "நான் அவமானத்திற்கு உட்பட்டேன். இயேசுவிடம், உண்மையாக அவரைச் சார்ந்திருக்கும் வழியைக் கேட்டேன். என்னில் ஓர் ஒளி வந்தது. அது என்னை மனிதனாக மாற்றியது" என்றார்.

எனதன்பு சிறுபிள்ளைகளே! பென்னி தன் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்தபோது வயதில் முதிர்ந்தவராக இருந்தார். நீங்கள் இச்சிறுவயதிலேயே உங்கள் வாழ்க்கையை இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள். வாழ்க்கைக்கு நோக்கமும் அர்த்தமும் கொடுக்கிறவர் இயேசுவே. இந்த 2026 ஆம் ஆண்டு முழுவதும் இயேசுவை நேசித்து அவரது வேத வசனத்திற்கு கீழ்படிவதே வாழ்வின் வெற்றி ஆகும்.

## மனப்பாடவசனம்: எபிரேயர் 12:1

**ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

**CHILDREN'S TIME**
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

நமது சபை தாங்கும் 43 மிஷனெரிகளும், 9 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.

**மாதம் தேவை: ரூ.2,17,100** பொறுப்பு: Bro. அர்னால்டு



**Pr. Daniel Babu** *Gujarath* **Pr. Stephen Rathod** *Rajasthan* **Pr. Mandeep kidhay** *Moga* **Pr. Chaman Masih** *Ablowal* **Pr. Binu Vijayan** *Tripuri*




**Pr. SawarGill** *Gurdaspur* **Pr. Peter Masig** *Taran Taram* **Pr. Sandeep Singh** *Chunnai Kalan* **Pr. Inderjit Singh** *Mohali* **Pr. Prasenjit Basumatary** *Assam*



**Pr. Karthick** *Chandigarh* **Pr. Gurdial Singh** *Dehriwal Droga* **Pr. Rajkumar** *Kurali* **Pr. Rajesh** *Mahatpur* **Pr. Simson** *Karnataka*



**Pr. Happy Masih** *Sarspur* **Pr. Jirma Lal** *Bazara* **Pr. Caleb** *Delhi* **Pr. Heral Kaddara** *Rajasthan* **Pr. Arionp Kumar** *Ajimar* **Bro.Sam Guna Seelan** *Sharing Love Mission*



**Pr. Kamal Deep** *Punjab* **Pr. Godson Joy** *Punjab* **Pr. Harjeet Kaur** *Nawashar* **Pr. Jaswinder Kumar** *Delhi* **Pr. Pritam Singh** *Rajasthan* **Pr. Sonu** *Makhu* **Pr. Patras Masih** *Feruyzepur*



**Pr.Dhananjay Nokman** *Assam* **Pr. Jinod Rabha** *Assam* **Bro. Prakash** *Shalom Charity Trust* **Sis. Sugantha** *Shalom Charity Trust* **Bro. Joshua Bhuriya** *Shalom Charity Trust* **Sis. Karuna K. Damor** *Madhya Pradhesh*



**Pr. Ranvir Singh,** *Assam* **Pr. Basant Thapa,** *Assam* **Pr. Amos Mardi,** *Assam* **Pr. Dilip Subba,** *Assam* **Pr. Baburam Chettri,** *Assam*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

**Name** : Assembly of God Pudukottai
**Bank** : TMB
**A/c No.** : 035100140450007
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 20 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 23 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 20 |
| 04 | Sis. வசந்தா , Sis. கோயில் செல்வி | 26 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 12 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 17 |
| 09 | Pr. ராஜன், Sis. காஞ்சனா | 21 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 13 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலெக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 16 |

உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள *QR Code* ஐ *Scan* செய்யவும்.

# சாட்சிகள்

● நான் ஒரு லாரி டிரைவர், வேலை முடிந்தபின் சம்பளம் வாங்குவதற்காக என் பைக்கில் அமர்ந்திருந்தேன். அப்போழுது ஒரு போன் வந்தது. நான் போன் பேசிகொண்டே சிறிது தூரம் நடந்து சென்றேன். அப்பொழுது ஒரு பெரிய கார் நான் உட்கார்ந்திருந்த எனது பைக்கை இடித்து ஏறி சென்றது. எனக்கு எந்த ஒரு சேதமும் இல்லாமல் தேவன் என்னை பேராபத்திலிருந்து என்னை காப்பாற்றினார். தேவனுக்கே மகிமை.

-Bro. ராஜா, கூட்டாம்புளி

---

● கடந்த வாரத்தில் என்னுடைய பேரன் மற்றும் பேத்திக்கு சளிக்காய்ச்சல் தொந்தரவு அதிகமாக இருந்ததினால் மிகவும் அவதிப்பட்டார்கள்.சுகமானால் சாட்சி எழுதிப்போடுவேன் என்று பொருத்தனை பண்ணிவிட்டு தேவனை நோக்கி ஜெபித்துக் கொண்டே இருந்தேன். என் ஜெபத்தைக் கேட்டு பேரக்குழந்தைகளுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் என் வலது முட்டியில் இருந்து வந்த கடுமையான வலியையும் தேவன் நீக்கி பூரண சுகத்தைக் கட்டளையிட்டார். பரிபூரண சுகத்தைக் கொடுத்த தேவனுக்கே நன்றி.

- Sis. செண்பகஜோதி, புதுக்கோட்டை

---

● என்னுடைய மற்றும் என் கணவருடைய வேலையில் நெருக்கடி ஏற்பட்டது. எங்கள் பிரச்சனை மாற வேண்டும் என்று கண்ணீரோடும் பொருத்தனையோடும் ஆலயத்தில் ஜெபித்தேன். என்னுடைய வேலையில் இருந்த பிரச்சனை நீங்கி போனஸ் கிடைத்தது. கணவருக்கு வேறு ஒரு வேலை கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

- Sis. பிரசன்னா, புதுக்கோட்டை

---

● எனக்கு முதுகுவலி அதிகமாக இருந்த காரணத்தினால் ஸ்கேன் பன்ன வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஸ்கேனில் வயிற்றில் 5 செ.மீ அளவு கட்டி இருப்பதாகவும் ஆப்ரேஷன் செய்து அகற்றலாம் எனச் சொன்னார்கள். நான் பாஸ்டர் அம்மாவிடம் சொன்னேன். அவர்கள் கர்த்தர் நன்மை செய்வார் என்று சொன்ன வார்த்தையின்படியே மறுபடியும் செக்-கப் சென்று ஸ்கேன் எடுத்து பார்த்தபோது கட்டி கரைந்துவிட்டதாக கூறினார்கள். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். அதுமட்டுமல்லாமல் முதுகெலும்பில் பிரச்சனை இருந்தது அதினால் அதிக நேரம் உட்காரக்கூடாது, நடக்கக்கூடாது, வண்டி ஓட்டக்கூடாது என்று டாக்டர் சொன்னார்கள். ஆனால் கர்த்தர் இதை எல்லாவற்றையும் செய்வதற்கு பலனை கொடுத்து ஆச்சரியமாய் நடத்தினார். சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி. எனக்காக ஜெபித்த பாஸ்டர் ஐயாவுக்கும், பாஸ்டரம்மாவுக்கும் நன்றி.

- Sis. கோயில் செல்வி, சிவஞானபுரம்.

.


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00-12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/- மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 934571 2349 விண்ணப்ப படிவம் QR Code இல் இணைக்கப்பட்டுள்ளது.





அமாவாசை ஜெபம்

16 பிப்ரவரி திங்கள்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00-12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

**பிப்ரவரி–2026**
**அப்போஸ்தலருடைய நடபடிகள்**
**அதிகாரம் (10–18) வரை**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | |
| | 3 | 4 | | | | |
| | | | | | 5 | |
| 6 | | | | 7 | | |
| | | | 8 | | 9 | |
| | 10 | | | | | 11 |
| 12 | | | | | | 13 |

**வலமிருந்து இடம்**

01. யார் சந்தோஷத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்?
05. எந்தப் பட்டணத்தார் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்?
09. தீமோத்தேயுவின் தாய் விசுவாசமுள்ள எந்த ஸ்திரீயாயிருந்தாள்?
11. யார் உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்?
13. பவுலும், பர்னபாவும் தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போட்டு எந்தப் பட்டணத்துக்குப் போனார்கள்?

**இடமிருந்து வலம்**

02. எவைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின?
04. சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தது யார்?
06. எங்கே ஒருவன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்தான்?
07. பவுல் யாரைத் தெரிந்து கொண்டு புறப்பட்டு திரிந்து சபைகளைத் திடப்படுத்தினான்?
12. எங்கே வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியானவர் தடை பண்ணினார்?

**மேலிருந்து கீழ்**

03. தியொனீசியு எந்த மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாயிருந்தான்?
04. எங்கே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று?
08. பேதுரு கதவைத் தட்டின போது ஒற்றுக் கேட்க வந்த பெண் யார்?

**கீழிருந்து மேல்**

06. இரத்தாம்பரம் விற்றவளாயிருந்தது யார்?
10. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் எப்படிப்பட்ட இரத்தத்தினாலே தோன்றப் பண்ணினார்?
11. எந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைப் பவுல் கண்டான்?
12. பேதுரு எந்த மணி நேரத்திலே ஜெபம் பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான்?

**முக்கிய குறிப்பு:**

உங்களுடைய பதில்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் நிரப்பி,
வசன இருப்பிடத்தையும் எழுதி அனுப்பவும்.
20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது
அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்

**பரிசு பெறும் 3 நபர்கள்**

1. Sis. ஹெலன் திலக், புதுக்கோட்டை
2. Sis. செத்சியாள் யோபு, புதுக்கோட்டை
3. Sis. மகேஷ்வரி, குலையங்கரிசல்

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

**Name** : J. Samuel Jebaraj
**Bank** : ICICI - Bank
**A/c No.** : 613901506045
**IFC Code** : ICIC 0006139
**Branch** : Tuticorin

*UPI ID:*
**prjsjebaraj@okaxis**

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

**3.02.2026 – செவ்வாய்கிழமை**
மண்டல போதர்கள் ஐக்கிய கூடுகை
திருநெல்வேலி

**4,5.02.2026 – புதன், வியாழன்**
கன்வென்ஷன் கூட்டங்கள் – நாகர்கோவில்

**9–14.02.2026 – திங்கள் – சனிக்கிழமை**
ஊழியர்கள் எழுப்புதல் முகாம் – மலேசியா

**15.02.2026 – ஞாயிற்றுக்கிழமை**
ஆண்கள் முகாம் – நாகர்கோவில்

**16.02.2026 – திங்கட்கிழமை**
அமாவாசை ஜெபம் – பிரையர் பார்க்

**17.02.2026 – செவ்வாய்கிழமை**
ஊழியர்கள் ஐக்கிய கூடுகை – பாளை

**25,26.02.2026 – புதன், வியாழன்**
போதகர்களுக்கான முகாம் – திருவாரூர்

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**





எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349


ABOUT US

SCAN ME

To ........................................................................................

........................................................................................

........................................................................................